**25 பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் - 2018**

25 பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அரவுப் பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 886 ஆம் இலக்க 2014 சனவரி 30 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதய வீதி மற்றும் நெடுங்சாலைகள் அமைச்சு முன்னைய நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பயனிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்கான கேள்வி அதிகரிப்பினை எதிர்கொள்ளல் மற்றும் வாகன செயற்பாடுகள் மற்றும் விபத்துக்களை குறைத்தல் என்பவற்றினூடாக உரிய பகுதிகளின் பொருளாதார மற்றும் சமூக அபிவிரத்திக்கு பங்களிப்பு செய்தல் என்பவற்றிற்காக மேற்கு, சப்பிரகமுவ, கிழக்கு, தெற்கு, வடமேற்கு, மத்திய, வடக்கு மாகாணங்களில் பாதசாரி கடவையுடன் கூடிய இரு வழிப்பாதை கொண்ட 25 பாலங்களை புனர்நிர்மானம் செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,632 மில்லியனிற்குச் சமமான யூஎஸ் டொலர் 35.41 மில்லியன் தொகையினை அரவுப் பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2015 செப்தம்பர் 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 செப்தம்பர் 05 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 திசெம்பர் 31 வரை இரு முறை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி-யொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| செயற்திட்டத்தின் ஒப்பந்தப்பொதி -01 இன் கீழ் நிர்மானிக்கப்பட்ட 08 பாலங்களின் நடைமுறை வேலைப்பெறுமதி வேறாக அடையாளப்படுத்தி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைவேலைப் பெறுமதியின் விபரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். ஒவ்வொரு பாலத்துடனும் நேரடியாக தொடர்புபட்ட கிரயம் 2019 முதல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | பூர்த்தியாக்கப்பட்ட பாலங்களின் கிரயம் நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட நேரத்தில் சொத்துக்கள் விதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளித்ததாக வேறுவேறாக காட்டப்படல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்**

| கூறுகள் | நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 அல் உள்ளவாரான பௌதீக செயலாற்றல் | | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட சதவீதம் | அடையப்பெற்ற சதவீதம் | | | |
| பொதி -01 | 8 பாலங்களின் அகலப்படுத்தலின் புனர்நிர்மானம் | 100 | 67 | எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் உரிய நேரத்தில் தொடர்புடய நபர்களிற்கு சென்றடையாமல் இருக்கக்கூடும். | வேலைகள் ஒப்பந்ததாரரின் ஏழ்மையான நிதி இயலளவு மற்றும் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடையேயான அடிக்கடியான பிணக்குகள் போன்ற காரணத்தினால் திட்டமிடப்பட்ட நேரப்படி அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நேரம், பௌதீக மற்றும் நிதியில் எதிர்வுகூறல்களை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| பொதி -02 | 9 பாலங்களின் அகலப்படுத்தலின் புனர்நிர்மானம் | பால வடிவமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் பெறுகை ஆவணங்களின் தயாரிப்பானது செயன்முறையில் காணப்பட்டது. | | மேற்கூறிய படி | சிவில் நிர்மான வேலைகளின் ஒப்பந்தமானது 2019 இல் வழங்கப்பட்டிருந்தது. | |
| பொதி -03 | 8 பாலங்களின் அகலப்படுத்தலின் புனர்நிர்மானம் | ஆலோசகரை தெரிவு செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | | மேற்கூறிய படி | பொருத்தமான ஆலோசகரை தெரிவு செய்வதற்கான தொழிநுட்ப மதிப்பீடுகள் 2019 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. | |

**3.2 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| **கணக்கீட்டுக் குறைபாடுகள்** | **விளைவு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| ஒப்பந்ததாரரின் மந்தகதியான நிதி இயலளவினைக் கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்பொதி – 01 இன் கீழாக மீதமாக உள்ள சிவில் வேலைகளை பூர்த்தியாக்க வெளியிடப்பட்ட ரூபா 49 மில்லியன் பெறுமதியான விசேட முற்பணத்தின் மீது உத்தரவுப்பத்திரமானது பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரரினால் தேவையற்ற அனுகூலங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி முற்பணங்களை மீளப்பெற்றுக்கொள்வதும் சந்தேகமாக காணப்பட்டது. | வரிசை அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்பட்டதன் பின்னரே முற்பணம் விடுவிக்கப்பட்டது. | கொடுப்பனவுகளின் சட்டபூர்வதன்மை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியதுடன் நிலுவைகளை விரைவாக மீளப்பெற்றுக்கொள்ளல் வேண்டும். |